தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவாற்றலால், தூய்மையான தொண்டு உள்ளத்தால் நேற்று 37 பாராளுமன்ற உறுப்பினர்கள், இன்று ஸ்ரீரங்கம், நாளை 234 சட்டமன்ற உறுப்பினர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியம்; வெல்வது நிச்சயம் என்று கூறி இரு கரம் கும்பிட்டு வணங்குகிறேன். கும்பிட்ட கைகள் விலகும் முன்பே வான்மழை பொய்த்தாலும், வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை நிரூபிக்கும் வகையில், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

19—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***38295—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சி, புதுச்சேரிமேடு பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுச்சேரிமேடு முதன்மை அங்கன்வாடி மையம் 1982–ல் துவக்கப்பட்டு, தனியார் வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குக் கட்டடம் கட்ட சர்வே எண் 366–ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிட்டா அடங்கலும் பெறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்கீழ் இந்த

2015 பிப்ரவரி 19]

மையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், புதுச்சேரிமேடு பகுதியில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொன்னேரி பேரூராட்சி, 15–வது வார்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த, 250 நபர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்தப் பகுதியிலே ஒரு சமூக நலக் கூடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் கூடம் பேரூராட்சிப் பகுதியில் வேண்டுமென்று கேட்கின்றார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஒரு கேள்வி எழுப்பி, பதிலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழுநோயாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது சமூக நலத் துறை. ஆனால் அவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டுவது என்றால், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலுள்ள உரிய துறையின் நிதியிலிருந்து கேட்டுப் பெற்று, சமுதாயக் கூடம் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் கூடம் கட்டித் தர வாய்ப்பு இல்லை என்றால், சமூக நலத் துறை மூலமாக அங்கே ஒரு முதியோர் இல்லம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லம் என்பது வேறு; தொழுநோயாளிகளுக்கான இல்லம் என்பது வேறு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒருங்கிணைந்த முதியோர் வளாகம் என்ற வகையில் தமிழ்நாடு முழுவதும் முதியோர் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. தொழுநோயாளிகளுக்கென்று தனியாக இல்லங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற காரணத்தினால், தொண்டு நிறுவனங்களைத் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக அந்தப் பகுதியிலே கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 10—25

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் திருவிடைமருதூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் அங்கன்வாடி மையங்களில் பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ஒதுக்கிட ஏதுவாக, மாவட்ட அளவிலான அதிகாரிகளிடம் எந்தெந்த மையங்கள் பழுதடைந்துள்ளன என்று பட்டியல் கேட்டபோது, 58 மையங்கள் பழுதடைந்து, பாழடைந்த நிலையில் இருக்கின்றன என்று பட்டியல் தந்தார்கள்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2015 பிப்ரவரி 19]

அதனடிப்படையில் ஆண்டுக்கு நான்கு புதிய மையங்கள் என்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதுவரை 16 மையங்களுக்கு நிதி வழங்கியிருக்கிறேன். எஞ்சிய ஓராண்டில் இன்னும் 4 மையங்களுக்கு வழங்கவும் இருக்கிறேன். ஆனால், மீதம் இருக்கக்கூடிய மையங்களில் பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பற்றாக்குறையாக இருக்கின்றது. என்னுடைய தொகுதி திருபுவனம் பேரூராட்சியில், காங்கேயம்பேட்டை என்கின்ற பகுதியில் இருக்கின்ற அங்கன்வாடி மையம் மிக மிகப் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. எனவே, தொகுதி மேம்பாட்டு நிதியைக் காரணம் காட்டி அங்கன்வாடி மையத்திற்கு நிதியொதுக்குவதைத் தவிர்த்துவிட்டு, பழுதடைந்த மையங்களுக்குப் பதிலாக புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெங்கு பழுதடைந்த கட்டடங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் சரி செய்வதற்கும், சொந்தக் கட்டடம் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்குச் அவற்றை கட்டுவதற்கும் உத்தரவிட்டு, அதனடிப்படையிலே கணக்கிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கணக்கின்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமல்ல; மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமையின் அடிப்படையிலேயும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலே மட்டும் அங்கன்வாடி மையங்கள் கட்டப்படுவதில்லை. இதற்கும் மேலாக குழந்தைகளை நேசிக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள்கூட அங்கன்வாடி மையங்களைக் கட்டித் தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் உடனடியாகக் கட்டப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61–வது வட்டம் நரியங்காடு, வரதராஜபுரம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்து நீண்ட நாட்களாகியும், இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. ஏனென்றால், அங்கு ஏற்கெனவே அங்கன்வாடி மையம் இருந்து, பழுதடைந்து இடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 61–வது வார்டு என்று சொன்னார். தவிர, 61–வது வார்டிலே நிறைய மையங்கள் இருப்பதால், எந்தப் பகுதியிலே அவர் பணம் தந்து அங்கன்வாடி மையம் கட்டப்படாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒரு வார்டிலே ஒரு மையம் மட்டும் இருக்காது. கிட்டத்தட்ட 50, 60 மையங்களுக்கு மேலாகத்தான் இருக்கும். எங்கு, எந்த வார்டில் அந்தப் பழுதடைந்த கட்டடம் இருக்கிறது என்பதையும், அது குடிசை மாற்று வாரியத்தினுடைய பகுதியா என்பதையும் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக அதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*